## COVID 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம் - 2022

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

COVID 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் 2022 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 10 மாத காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 10 மாத காலப்பகுதிக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 ஒக்டோபர் 31 இல் முடிவடைந்த 10 மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் 2022 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த 10 மாத காலப்பகுதிக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின்வச தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அரசியலமைப்பின் 145(1) | நிர்ணயிக்கப்பட்ட நோக்கத்திற்காக சட்டத்தால் ஒதுக்கப்படாத பெறுவனவுகளும், குடியரசிற்கு சொந்தமான அனைத்து நிதியங்களும் ஒன்றிணைந்து ஒருங்கிணைந்த நிதியத்தை அமைத்துள்ளதுடன் மற்றும் அனைத்து வரிகள், வீதவரிகள் மற்றும் கட்டணங்கள் போன்ற மூலங்களிலிருந்து பெறப்படுகின்ற வருமானங்களும், நிர்ணயிக்கப்பட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப்படாத குடியரசிற்கு சொந்தமான ஏனைய அனைத்து வருமானங்கள் மற்றும் பெறுவனவுகளும் ஒருங்கிணைக்கப் பட்ட நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2022 ஒக்டோபர் 10 ஆம் திகதிய அமப/22/1608/601/018 ஆம் இலக்க அமைச்சரவைத் | 2022 ஒக்டோபர் 10 ஆம் திகதிய அமப/22/1608/601/018 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த மையால் 2022 ஒக்டோபர் 28 இல் கோவிட்-19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் மீதித்தொகை ஜனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | சட்டங்கள், விதிகளின் எற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தீர்மானத்தின் பிரகாரம் 2022 ஒக்டோபர் 28 இல் கோவிட்-19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் ரூபா 218,712,624 ஆன மீதித்தொகை ஜனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறுகள் ரூபா 1,728,167,492 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்க எதிராக கடந்த வருடத்தின் மிகை ரூபா 274,070,004 ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேறுகளில் ரூபா 2,002,237,496 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிதியத்தால் சுகாதார அமைச்சில் மருத்துவ வழங்கல்களுக்கான நிலுவைப் பற்றுச்சீட்டுக்களை தீர்ப்பதற்காக திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு ரூபா 1,800,000,000 வழங்கப்பட்டமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2022 யூன் 06 ஆந் திகதி நடாத்தப்பட்ட கோவிட்-19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில், கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தமது பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்காக கல்விப் புலமைப்பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற் கான பிரேரணையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட போதிலும், அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக கணக்காய்வின்போது அவதானிக்கப்படவில்லை. | கணக்குகளை மூடுவதற்கான ஆரம்ப பணிகள் திட்டமிடப்பட்டுள்ளதால் புலமைப்பரிசில் வழங்குதல் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதற்கு முடியாதிருந்நதாக தெரிவிக்கப்படுகின்றது. | முகாமைத்துவ குழுவின் முடிவுகளை செயல்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) நிதியத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பான | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டில் | செயல் நடவடிக்கைத் திட்டமொன்று மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பான |

| | | |
|---|---|---|
| அறிக்கையொன்றும் தயாரிக்கப்படவில்லை. | ஏற்பட்ட கட்டுப்பாடான நிலைமைகள் காரணமாக, அரச ஊழியர்கள் சுழற்சி அடிப்படையில் பணிபுரிய அழைக்கப்பட்டமை, ஜனாதிபதி செயலகத்தை மையமாகக் கொண்ட போராட்ட நடவடிக்கைகள் காரணமாக அத்தியாவசிய சேவைகள் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வந்தமை போன்ற காரணங்களால் நிதியத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையொன்றும் தயாரிக்கப்படுவதற்கு முடியாதிருந்நதாக தெரிவிக்கப்படுகின்றது. | அறிக்கையொன்றும் தயாரிக்கப்பட வேண்டும். |

**3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கொவிட் - 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம் மரத்துவ உபகரணங்கள் உட்பட சுகாதார சேவைகளை வழங்குதல் போன்ற பிரதான் நோக்கங்களுக்கு மேலதிகமாக பின்வரும் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டன.<br><br>• குழந்தைகள், பெண்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள், முதியவர்கள், ஊனமுற்றோர் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்குதல்.<br><br>• கிராமப்புற மற்றும் தொலைதூர மருந்தகங்களுக்கு நிதி உதவி வழங்குவதன் மூலம் பொது சுகாதாரத் துறையை வலுப்படுத்துதல். | கணக்குகளை மூடுவதற்கான ஆரம்ப பணிகள் திட்டமிடப்பட்டுள்ளதால் புலமைப்பரிசில் வழங்குதல் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதற்கு முடியாதிருந்நதாக தெரிவிக்கப்படுகின்றது. | முகாமைத்துவ குழுவின் முடிவுகளை செயல்படுத்துதல் வேண்டும். |

- உள்ளூர் மூலப்பொருட்கள், வளங்கள், அறிவு மற்றும் திறன்களைப் பயன்படுத்தி சுகாதாரப் பொருட்களை உற்பத்தி செய்யவும், மற்றும் விநியோகிக்கவும் உள்நாட்டு மருத்துவப் பிரிவுகளுக்கு உதவுதல்.

- உயர்தர பாதுகாப்பு ஆடை மற்றும் சுகாதார பொருட்களை வழங்குவதற்கு புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.

எனினும் மேற்குறித்த நோக்கங்களுக்காக நிதி பயன்படுத்தப்படாததுடன் நிதியத்திற்கு பெறப்பட்ட நிதியில் மொத்தம் ரூபா 1,663,886,025 நிலையான வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு 2022 ஒக்டோபர் 31 இல் ரூபா 50,277,518 ஆன வட்டி வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.